திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. அதுபோன்று இப்பொழுது மாவட்டந்தோறும் தொழில்பேட்டை இல்லாத மாவட்டத்தை மாவட்டம் என்றே சொல்வதற்கு அருகதை இல்லை என்று கூறுகின்ற நிலை இருக்கிறது. 30-9-93 அன்று இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைப் புதிய மாவட்டமாக விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்று துவக்கி வைத்தார்கள். எங்களுடைய மாவட்டம் முழுவதுமே விவசாயிகள் நிறைந்த மாவட்டம். ஆகவே, இந்த ஆண்டே விழுப்புரத்திற்கு அருகாமையில் உள்ள தேர்வு செய்யும் இடத்தில் தொழில்பேட்டை துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திரு. இராமசாமி படையாச்சியார் பெயரில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மாவட்டத்தை உருவாக்கினார்கள். அந்த மாவட்டத்திலே தொழில் வளம் இல்லாத காரணத்தினால் அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய எண்ணக் கனவுகளை நனவாக்குகின்ற வகையிலேதான் இந்தப் பகுதியிலே ஓர் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்குத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெகுவிரைவில், அதற்குண்டான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37. திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

37—

தமிழ்நாடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை

***13826**—திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேர மிகவும் பிற்பட்ட, பிற்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 5 மதிப்பெண்கள் குறைவாக பெற்றிருப்பினும் அவர்களை அந்நிறுவனங்களில் அனுமதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1995 மார்ச் 16]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதுபோன்ற செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழ இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கல்வியில் பல்வேறு சலுகைகளைச் செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மிகவும் பின்தங்கியவர்களுக்கு, 5 மதிப்பெண்கள் அவர்கள் குறைவாகப் பெற்றிருந்தாலும், அனுமதித்தால், அவர்கள் ஆசிரியர் பயிற்சி பெற ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களின் அரசு, இதைப் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கென்று, குறைந்தபட்ச கல்வித் தகுதி பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும் என்பதாகும். மற்ற வகுப்பினருக்கு அந்தத் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்றிருக்கிறது. இதற்கே, ஒருசில தனியார்களும், தனியார் நிறுவனங்களும் நீதிமன்றத்திற்குச் சென்று, அவர்களுக்கென்று தனியாக ஒருசில ஆணைகளைப் பெற்றிருக்கிறார்கள். இதற்கான தீர்ப்பு, இன்னும் முழுமையாக வெளிவரவில்லை. தீர்ப்பு விவரம் எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, மதிப்பெண்களைக் குறைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் பல்வேறு மாணவ மாணவிகள் பயிற்சியில் இடமில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவசியம் இதை மீண்டும் ஆராய்ந்து, இதனைச் செய்ய வேண்டுமாய் மிக்க பணிவன்போடு கேட்டுக்கொண்டு, அரசு இதைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பெண்களைக் குறைத்தால் மட்டும், அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதல்ல. அரசு நடத்துகிற இத்தகைய நிறுவனங்களில், முழுமையாக மதிப்பெண்களின் அடிப்படையிலும், இட ஒதுக்கீட்டு முறையிலும்தான் இடம் அளிக்கப்படுகிறது. ஆகவே, குறைந்தபட்ச அளவு மதிப்பெண்களைக் குறைத்தால், எந்தவித பலனும் ஏற்படாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியோடு சேர்ந்து வருகின்ற காரணத்தினால், இந்தக் கேள்வியைக் கேட்கின்றேன். ஏற்கெனவே நாம் 172 பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி, அவற்றிலே படித்த மாணவ மாணவிகள்—33 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள்-இதுவரைக்கும் பரீட்சை எழுதாமல் இருக்கிறார்களே, இது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா; ஆம் என்றால், அவர்கள் பரீட்சை எழுதி, ஒரு சான்றாவது வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய கவனத்திற்கு மட்டுமல்ல; இங்கே இருக்கிற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கும் சென்ற சட்டமன்றத் தொடரிலேயே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக, உச்சநீதிமன்ற ஆணை இருப்பதால், தேர்வு நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. இப்போது `N.C.T.E.' என்று மத்திய அரசிலே குழு அமைத்திருக்கிறார்கள், `National Council of Teachers Education' அவர்கள் என்ன வழிகாட்டு நெறிமுறைகளைத் தருகிறார்களோ, அவற்றின் அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. எஸ்.சண்முகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்.

38—

வெட்டன்விடுதி கூட்டுறவு அங்காடியை இரண்டாகப் பிரித்தல்

*** 23004—***திரு. எஸ். சண்முகநாதன்:*

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி யூனியன், வெட்டன்விடுதியில் இருக்கும் கூட்டுறவு அங்காடியை இரண்டாகப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கா.ப.பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி பகுதியிலே இருக்கிற அங்காடியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுங்காலமாக